செ.வெ.எண்: 54 நாள்: 27.08.2018

## நாகப்பட்டினம் மாவட்டம்

### நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான வாராந்திர சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான வாராந்திர சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று **(27.08.2018) மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன் அவர்கள்** தலைமையில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான வாராந்திர சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன் மற்றும் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து **08** மனுக்களும், மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து **217** என மொத்தம் **225** மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஒருவார காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு உரிய முடிவினை மனுதாரர்களுக்கு அறிவிக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் கலை பண்பாட்டுத்துறை சார்பில் நலிவுற்ற இசைக்கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 5 நபர்களுக்கு தலா ரூ.12,000 வீதம் மொத்தம் ரூ.60,000 க்கான காசோலைகளைகளையும், ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் 1 பயனாளிக்கு ரூ.5000 மதிப்பலான சலவைப்பெட்டியினையும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், மறையாயநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர் திரு.எஸ்நடராஜன் என்பவர் கேரளா மாநில முதமைச்சர் நிவாரண நிதிக்காக ரூ.20,000-க்கான காசோலையினை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன் அவர்களிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர்(சமூகப்பாதுகாப்புத் திட்டம்) திருமதி.எம்.வேலுமணி மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**